


லஷ்கர் உள்ளிட்ட பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்களை, இந்தியா ஓரளவுக்குத் தீவிரமாக எதிர்கொள்ளத் தொடங்கியதே, நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகுதான் என்று சொல்ல வேண்டும். எப்போதும் அறிக்கைகள் இருக்கும், வீர உரைகள் இருக்கும். ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், ஆன்னா ஊன்னா ஃப்ளைட் பிடித்து காஷ்மீருக்குப் போய் எல்லையோரம் வாக்கிங் பழகிவிட்டு வருவார்.

ஆனால், உருப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள், சிறப்பான என்கவுன்ட்டர் உற்சவங்கள், கணிசமான தீவிரவாதிகள் அழிப்பு இதெல்லாம் அந்த டிசம்பர் 13-க்குப் பிறகுதான். ஒரு தோராயக் கணக்கெடுப்பில் 2002 ஜனவரி தொடங்கி, இந்த வருடத்து ஏப்ரல் வரைக்கும் இரண்டு நாளுக்கு ஒரு லஷ்கர் போராளியாவது சுட்டுக்கொல்லப்பட்ட அல்லது கைது செய்யப்பட்டிருக்கிற விவரம் தெரிய வருகிறது. காஷ்மீரின் அனைத்து மூலை முடுக்குகளிலும் தினசரி ரெய்டு நடக்கிறது. நாலு பேராவது சிக்காமல் போவதில்லை. சிக்கும் நால்வரில் கண்டிப்பாக ஒரு லஷ்கர்.

இதில் சில அத்துமீறல்கள் இருப்பதாகவும், கணக்கு காட்டுவதற்காகவே யாரையாவது கைது செய்துவிட்டு, அவர்கள் லஷ்கர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிவிடுகிறார்கள் என்றும் சில காஷ்மீர் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

அப்படி ஒரேயடியாக பஜனை பண்ணிவிடவும் முடியாது. தெற்காசிய தீவிரவாத இயக்கங்களின் கண்காணிப்பு மையமான South Asian Terrorist Portal (www.satp.org), இந்தக் காலகட்டத்தில், என்கவுன்ட்டரில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கும் லஷ்கர் போராளிகளின் மிக நீண்ட பட்டியல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது. தேதி வாரியாக, இறந்தவர் பெயர் விவரங்களுடன் நீள்கிறது அந்தப் பட்டியல். சந்தேகமில்லாமல் மிகப்பெரிய காரியம்தான். கடந்த ஐந்தாண்டுகளில் குறைந்தது முந்நூற்றைம்பது லஷ்கர் வீரர்களையாவது இந்திய எல்லைக்காவல் படையினரும் சிறப்பு அதிரடிப் படையினரும் கைது செய்திருக்கிறார்கள் அல்லது சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

ஆனால், இதனாலெல்லாம் லஷ்கரின் பலம் குன்றிவிட்டதாகத் தெரியவில்லை. காஷ்மீரிலும் இந்தியாவின் ஏனைய சில வட மாகாணங்களிலும் தொடர்ந்து அவர்கள் இருக்கவும் - இயங்கவும் முடிகிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

2003 நவம்பர் 15-ல் சில பாதுகாப்பு காரணங்களுக்காக லஷ்கர் தன்னுடைய பெயரை ஜமாத் உத் தாவா (Jamath ud Dawa) என்று மாற்றிக்கொண்டது. இந்தியத் தரப்புக்குக் குழப்பம் தருவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பெயர் மாற்ற நடவடிக்கை இது. இதனைத் தொடர்ந்து வேறு சில பெயர்களிலும் லஷ்கர் போராளிகள் ஆங்காங்கே சில்லறைக் காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். சிறு இலக்குகள். வினாடி நேரத் தாக்குதல்கள். பிட் நோட்டீஸ் போட்டுவிட்டு சிட்டாகப் பறந்துவிடுவது. பல சமயம் மாட்டிக்கொண்டு குண்டடி பட்டு இறந்தும் இருக்கிறார்கள்.

ஆனால் கொஞ்சகாலம் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. பெயர் மாற்றக் குழப்பங்கள். எல்லாம் கொஞ்சகாலம்தான். இந்திய உளவுத்துறை மிக விரைவில் லஷ்கரின் புதிய அவதாரங்களை மோப்பம் பிடித்துவிட்டது. நவம்பர் 19-ம் தேதி பாரமுல்லாவில் மூன்று பேரைச் சுற்றி வளைத்துக் கைது செய்தபோது, மேற்படி புனைபெயரைத்தான் முதலில் சொன்னார்கள். நாலு தட்டு தட்டிக் கேட்டபோது உண்மை வந்துவிட்டது.

அதன்பிறகும் தொடர்ந்து வாரம் இரண்டு முறையாவது, இந்திய போலீஸுக்கும் லஷ்கருக்கும் இடையிலான சிறு யுத்தங்கள் நடந்துகொண்டுதான் இருந்தன. வெட்ட வெட்ட முளைத்துக்கொண்டே இருந்தார்கள். எனவே, காஷ்மீர் முழுவதிலும் லஷ்கர் தேடுதல் வேட்டை பலப்படுத்தப்பட்டது. இதில் பலனில்லாமல் போனது என்று சொல்ல முடியாது. நூற்றுக்கணக்கான தீவிரவாதிகளைச் சுட்டு வீழ்த்தவும் கைது செய்யவும் முடிந்தது முக்கியம்தான்.

ஆனால், காஷ்மீரை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்ததில் பிற பிராந்தியங்களில் கொஞ்சம் கோட்டைவிட்டு விட்டார்கள். பல மகத்தான சேதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். மயிரிழையில் தப்பித்தது இந்தியா என்றுதான் சொல்ல வேண்டும். எல்.கே. அத்வானி, வாஜ்பாய், காஷ்மீர் முதல்வர் குலாம் நபி ஆசாத் தொடங்கி பல பிரபலங்களுக்கு லஷ்கர் பல சந்தர்ப்பங்களில் குறிவைத்து, கட்டக் கடைசியில் திட்டம் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், இந்தியாவில் வேறெங்கெல்லாம் அவர்கள் ஊடுருவியிருக்கக் கூடும் என்று தேடிப்பார்த்திருக்க வேண்டும். தவறவிட்டதன் விளைவு, 2005-ம் ஆண்டு வட மாநிலங்கள் பலவற்றில், அடுத்தடுத்து நேர்ந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள். சுமார் இருபது உயிர்களும் முந்நூறு ஊசலாட்டங்களும்.

காஷ்மீர் தீவிரவாதிகள் என்னும் அந்தஸ்திலிருந்து இன்னும் சில படிகள் மேலேறி வந்து, இந்தியாவின் எந்த இடத்திலும் லஷ்கர் வேலை பார்க்கும் என்கிற நிலைமை 2005-ம் ஆண்டு உருவானது. அந்தந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கைது செய்தார்கள் என்பது உண்மையே. ஆனால், பரவியிருந்த நெட் ஒர்க்கை இந்திய காவல் மற்றும் உளவுத்துறையால் முறியடிக்க முடியாமல் போய்விட்டது.

அதற்கான விலையை 2006 ஜூலை 11-ம் தேதி கொடுத்தார்கள். நினைவில் இருந்தே தீரவேண்டும். மும்பை ரயில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள்.

மும்பைக்கு குண்டுகள் புதிதல்ல. எப்போதும் வெடிக்கும். அடிக்கடி வெடிக்கும். வெடித்த வேகத்தில் எழும் பரபரப்பு, மறுநாள் காலை அடங்கிவிடும். மீண்டும் மக்கள் ரயில் நெரிசல்களுக்கிடையே ஆபீஸ் போவார்கள். 1993-ம் ஆண்டு தாவூத் இப்ராஹிம் கோஷ்டி அரங்கேற்றிய தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஆரம்பித்து எண்ணிப் பார்த்தால், ஐந்து மிகப்பெரிய வெடிச் சம்பவங்களை அந்த நகரம் சந்தித்திருக்கிறது.

என்ன விசேஷம் என்றால், மும்பையில் என்ன நடந்தாலும் அது உடனடியாகப் பங்குச் சந்தையில் எதிரொலிக்கும். அரசியல் கட்சிகளிடையே பெரும் சலசலப்பை உண்டுபண்ணும். களேபரத்துக்குக் குறைவிருக்காது.

மேற்படி தொடர் ரயில் குண்டு வெடிப்புத் திட்டத்துக்கும் ஆதார நோக்கம் இதுவாகத்தான் இருக்க முடியும். தவிரவும், அந்த ஜூலை மாதம் பிறந்ததிலிருந்தே மும்பையில் நிலைமை சரியில்லாமல் இருந்தது. மூலை முடுக்கெல்லாம் கலவரம், அடிதடி, கல் வீச்சு. எல்லாம் ஒரு சிலை விவகாரம்.

பால் தாக்கரேவின் மனைவி மீனாதாயின் சிலை ஒன்றை (சிவாஜி பார்க்கில் வைக்கப்பட்டிருந்தது.) யாரோ அவமானப்படுத்திவிட்டார்கள் என்று நாலைந்து நாளாக நகரம் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது. அவருக்கு எதற்குச் சிலை? அதைப் போய் யார்

அவமானப்படுத்தினார்கள்? என்ன காரணம்? இதெல்லாம் இங்கே வேண்டாத விவகாரம். ஒரு சிலை. ஓர் அவமானம். ஒரு கலவரம். தீர்ந்தது விஷயம்.

விடுவாரா தாக்கரே? அவரே விட்டாலும் அவருடைய சேனைகள் விடுமா? எட்டாம் தேதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, மும்பையில் இருந்த முஸ்லிம் ஏரியாக்கள் ஒவ்வொன்றாகத் தேடித்தேடிப் போய்த் தாக்க ஆரம்பித்தார்கள். ஔரங்காபாத் சாலையில் ஒரு மாபெரும் மறியல், மத்திய மும்பையில் கடையடைப்பு, கல்வீச்சு, பஸ் எரிப்பு என்று ஜனநாயகம் கொடுத்திருக்கும் அத்தனை அற்ப சந்தோஷங்களையும் அனுபவித்துத் தீர்த்தார்கள்.

சகஜ நிலைக்கு நகரைக் கொண்டுவர, காவல் துறை படாதபாடு பட்டுக்கொண்டிருந்தது. அத்தனை பேர் கவனமும் சிவசேனா மீதுதான். எப்போது எங்கே கல்வீசுவார்கள் அல்லது பஸ் எரிப்பார்கள் என்று மட்டுமே காவல் துறையும் உளவுத்துறையும் நோட்டம் பார்த்துக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில்தான், தொடர் ரயில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அரங்கேறின.

யாருமே நினைத்துப் பார்த்திராத சம்பவம். இப்போது நினைத்தாலும் அடிவயிற்றைக் கலக்கும் சம்பவம். பால் தாக்கரே புண்ணியத்தில், சதித்திட்டத்தில் ஈடுபட்டவர்கள் பெரிய செக்யூரிடி பிரச்னைகள், செக் போஸ்ட் பிரச்னைகள், சந்தேகங்கள் ஏதுமின்றி மும்பையை மும்முறை வலம் வந்து ஏழு ரயில்களில் குண்டு வைத்தார்கள். ஏழு குண்டுகளும் வெடித்தன. எண்ணற்ற உயிர்கள். காற்றில் கரைந்த கதறல்கள்.

சம்பவம் நடந்த விதம், நடந்த தினம் இரண்டையும் வைத்து, முதலில் இது ஏதோ சர்வதேசத் தீவிரவாத இயக்க நடவடிக்கையாகத்தான் இருக்கும் என்று நினைத்தது மும்பை காவல்துறை. சரியாக அதே ஜூலை 11. ஆனால், அதற்கு ஒரு வருடம் முன்னால், லண்டன் மெட்ரோ ரயில்களில் வெடித்த அதே பாணி. அதே ரகக் குண்டுகள். ஆர்.டி.எக்ஸ்.

எனவே, இந்தியாவுக்குள் அல் காயிதா ஊடுருவிவிட்டதோ என்று கவலைப்பட ஆரம்பித்தார்கள். அல் காயிதா ஊடுருவினால் என்ன, அதன் அடுத்த வீட்டுக்காரன் ஊடுருவினால் என்ன? ஆபத்து நெஞ்சுக்கு நேரே வந்துவிட்ட பிறகு ஆராய்ச்சிகளால் புண்ணியம் கிடையாது.

நடந்தது இதுதான். சிமி என்கிற இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் ஒத்துழைப்புடன் லஷ்கர் இ தொய்பா தீட்டிய திட்டம் அது. மும்பைத் தாக்குதல். மூன்று விரார் விரைவு ரயில்கள், நான்கு போரிவில்லி ரெகுலர் ரயில்களை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மும்பையின் நெரிசல் மிக்க பகுதிகளின் வழியே செல்லும் ரயில் பாதைகள் இவை. எந்த நேரத்திலும் ஆயிரம் பேருக்குக் குறையாமல் ஒவ்வொரு ரயிலிலும் கூட்டம் இருக்கும்.

ஏழு ரயில்களிலும் முதல் வகுப்புப் பெட்டிகளில் ஏறிய தீவிரவாதிகள், சீட்டுகளுக்கு அடியில் சக்தி மிக்க குண்டுகளைப் பொருத்தினார்கள். முதல் வகுப்புகளை அவர்கள் தேர்ந்தெடுக்கக் காரணம், ஒப்பீட்டளவில் கூட்டம் கொஞ்சம் குறைவாக இருக்கும் என்பது. ஆனால், எப்போது எங்கே அவர்கள் ஏறினார்கள், எப்படிப் பொருத்தினார்கள் என்கிற விவரம் கடைசி வரை தெரியாமலேயே போய்விட்டது. எப்படியும் பீக் அவருக்குச் சற்று முன்னதாக முன்மாலைப் பொழுதிலேயே செய்திருக்கவேண்டும்.

தவிரவும், மேற்கு ரயில்வேயில் பொதுவாகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் படு மந்தம். டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் புகைவது போலத்தான் ஆபீஸர்கள் மப்பாக இருப்பார்கள். எல்லா ரயில் நிலையங்களிலும் வீடியோ கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்று ஒவ்வொரு சட்டமன்ற, நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கூடும்போதும் எம்.பிக்கள் பேசுவார்கள். பேசிய கையோடு மறந்தும் விடுவார்கள். போதாக்குறைக்கு மும்பை ரயில்வே பாதுகாப்புப் படையில் - குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் போதிய ஆள்பலம் கிடையாது.

ஒரு சில இடங்களில் பாம் டிடெக்டர்கள் உண்டு. ஆனால், மும்பை ரயில் நிலையங்களில் குவியும் மக்கள் வெள்ளத்தைப் பார்த்தால், டிடெக்டர்களுக்கே ஜுரம் வந்துவிடும். அதெல்லாம் ஒப்புக்கு.

இவையெல்லாம் சேர்ந்துதான் அன்றைய தினத்தைத் தீவிரவாதிகளின் தினமாக்கிவிட்டது. அன்று மாலை சுமார் ஆறரை மணிக்கு முதல் வெடிகுண்டு வெடித்தது. அடுத்த பதினொரு நிமிடங்களில் ஏழு ரயில்களின் முதல் வகுப்புப் பெட்டிகளும் வெடித்துச் சிதறி, நகரையே கலவரத்துக்குள்ளாக்கின. குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் ஒருபுறமென்றால், எழுந்த பதற்றத்தில் ரயிலிலிருந்து முண்டியடித்து வெளியேற முயன்று, முடியாமல் நசுங்கியோர் பல நூறு பேர். அத்தனை ரயில் நிலையங்களும் அலங்கோலமாயின. எங்கு பார்த்தாலும் ரத்தம். எங்கு பார்த்தாலும் கதறல். எங்கு பார்த்தாலும் பிய்த்துக்கொண்டு பறந்து விழுந்த ரயில் பெட்டியின் பாகங்கள்.

என்ன நடக்கிறது என்றே யாருக்கும் புரியவில்லை. முதல் நினைவாக விபத்து என்றுதான் அனைவருக்குமே தோன்றியிருக்கிறது. ஆனால், மொபைல்களின் உதவியால் ஏழு இடங்களில் அடுத்தடுத்து வெடித்திருக்கும் விஷயம் ஏழு நொடிகளில் வந்து சேர்ந்துவிடவே, கலவரம், பயம், பதற்றம் என்று மக்களின் ரத்த அழுத்தம் எகிறி எங்கோ போய்விட்டது.

ஒவ்வொருவரும் தாம் உயிர்பிழைத்துவிட்ட விஷயத்தை உறவினருக்குச் சொல்ல அவசரப்பட்டார்கள். உயிருடன் இருக்கிறார்களா என்று வெளியே போனவர்களைப் பற்றி வீட்டிலிருப்போர் தெரிந்து கொள்ள விரும்பினார்கள்.

விளைவு? மும்பை நகரின் அத்தனை மொபைல் லைன்களும் ஜாம் ஆகிப்போயின. யாருக்கும் யாருடனும் பேசத் தொடர்பு கிடைக்கவில்லை. எல்லோரும் காவல் நிலையங்களுக்கு ஓடினார்கள். கமிஷனர் முதல் கடைசி ஏட்டு வரை அத்தனை பேரும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கு ஓடினார்கள்.

என்ன, என்ன, என்ன? யார், யார் யார்? இதுதான். இது மட்டும்தான் கேள்வி.